பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியவர் : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

தினமணி

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.எல்

வார : 15] சென்னை : கார்த்திகை 8ஏ (24—11—67) வெள்ளி வெளியூர் : கார்த்திகை 9ஏ (25—11—67) சனி [இதழ் : 135

குறட் பாவுடன் சட்டமன்றம் துவக்கம்

சென்னை, நவ. 24—

தமிழகச் சட்டமன்றக் கூட்டத் தொடர் இன்று காலை 10 மணிக்குத் தொடங்கியது.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு'

என்ற குறளைச் சொல்லி, சட்ட மன்ற நடவடிக்கைகளைத் துவக்கி ஞர் அவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனர்.

'அரசியல் சட்ட உணர்வில் நச்சு கலக்கப்பட்டுவிட்டது'

'சனநாயகத்தின் கழுத்து நெறிக்கப்படுகிறது'

நாடாளுமன்றத்தில் இரா. செழியன் குற்றச்சாட்டு

புதுடில்லி, நவ. 23—

"தங்களுடைய செய்கைகளின் காரணமாக மத்திய அரசினர், 'அரசியல் தர்மத்தைக் கேவலமான நிலை மைக்குக் கொண்டுவந்துவிட்டனர்; இதனால் சனநாய கத்தின்மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கையே ஆட்டம் கொடுத்துவிட்டது!

"பல மாநிலங்களின் கவர்னர்கள், டெல்லி அரசின் ஆயுதங்களாக மாறிவிட்டனர்! பதவி பெற விரும்பு கிறவர்கள், தேர்தலில் வாக்காளர்களே நாடுவதற்குப் பதில், கவர்னரை நாடும் காலமாகிவிட்டது!

"கவர்னருக்குள்ள 'அதிகார எல்லை'யைக் குறிப்பிட்டு, அரசியல் நிர்ணய சபையிலேயே டாக்டர் குன்ஸ்ரூ, பி. விசுவநாத தாஸ், பி. ஜி. கேர் போன்றவர்கள் அச்சம் தெரிவித்தனர்; அவர்கள் பயந்ததுபோல் இப் பொழுது நடந்துவிட்டது!

"ஓர் அமைச்சரவையைப் பதவியில் அமர்த்தவோ, 'டிஸ்மிஸ்' செய்யவோ கவர்னருக்கு அதிகாரம் கொடுத்திருப்பது, மிகவும் ஆபத்தானது; 'பெரும் பான்மை' நிலையற்றி சங்தேகம் எழுமானால், அதை, சட்டமன்றத்தில்தான் நிர்ணயித்துக்கொள்ள வேண் டும். இதனையெல்லாம் மீறி மத்திய அரசு செயல்படு மானால், ஜெர்மனியில் ஏற்பட்ட சர்வாதிகாரம் இங்கும் ஏற்பட்டுவிடும்"

என்று மக்களவையில், இந்திரா காந்தி அமைச்சரவையுமே கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது நடை பெற்ற விவாதத்தின்போது பேசுகையில், திரு. இரா. செழியன் அவர்கள் சுட்டிக்காட்டி விளக்கினார்.

"பிரிட்டிஷார் காலத்தில் காங்கிரசுக் கட்சியினர் எதை எதிர்த்து வந்தனரோ அதையே அவர்கள் இப்போது செய்கின் றனர்; அப்போது பதவிமேற்பதற்கு முன் அவர்கள், அமைச் சரவை நிர்வாகத்தில் கவர்னரின் குறுக்கீடு இருக்கக்கூடாது —என உத்தரவாதம் கேட்டனர்; ஆனால் அவர்களே இப் போது, துப்பாக்கிக் குண்டுகளையும், இராணுவத்தையும் போலீ சையும் கொண்டு சேலம்டீ முனிசிபாலிட்டியை"

என்று இரா. செழியன், மத்திய அரசின் நடைமுறைப் போக்கைக் கண்டிக்கையில் விளக்கிக் குறிப்பிட்டார்.

"அண்மையில் நடைபெற்ற தேன் சென்னை இடைத் தேர் தலின்போது, காங்கிரசுக் கட்சியின் தலைவர் காமராசரும், மற்றும் சிலரும்—அவர்களுடைய கையிலுள்ள இராணுவம் இருப்பதுபோன்று—'நாங்கள், இராணுவத்தைக் கொண்டுவரு வோம்' என்றெல்லாம் பேசியிருக்கின்றனர்"

என்று இரா. செழியன் சுட்டிக்காட்டியபோது, காங்கிரசு உறுப் பினர்கள் குறுக்கிட்டு, 'அவர் அப்படிப் பேசியதாக நாங்கள் எங்கும் பத்திரிகையிலும் படிக்கவில்லை' எனக் கூறினர்; துணை அவைத் தலைவர் கமலக்கர் குறுக்கிட்டு, 'நீங்கள் மிகவும் பெரிய குறைச்சாட் டைக் கூறுகிறீர்கள் என்பதை நினைவுறுத்துகிறேன்' எனக் கூறினார்; உடனே இரா. செழியன், 'ஆதாரத்துடன்தான் கூறு கிறேன்; நான் அதை மெய்ப்பிக்கத் தயார்' என்றார்.

தொடர்ந்து அவர், 'கவர்னர்களின் அதிகாரத்தைக் குறைத்து அதற்கு ஒரு கட்டுப்பாடு கொண்டுவர வேண்டும்; இன்றேல் சன நாயகத்திற்கு ஆபத்து ஏற்படும்' என வலியுறுத்தினர்; அவரது பேச்சு வருமாறு :—

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குப் பதில் இப்போது காங்கிரசு ஏகாதிபத்தியம் மத்திய அரசில் அமர்ந்திருக்கிறது! இந்த நிலை நீடிக்குமானால், சனாயகத்தின் கழுத்து நெறிக்கப்படுவதாகி விடும்!

அரியானா, மேற்கு வங்கம், பஞ் சாப் ஆகிய இடங்களில், தவ றான செயல்களின் கலவைத் தொடர்ந்து நடந்துள்ளது; அங் கெலாம் சனாயகக் கொலை நடந்துள்ளது!

'கூட்டணிக்குப் பெரும்பான்மை இல்லை' என்று அரியானு கவர் னர் கருதியிருந்தால், சட்டமன் றத்தை அவர் உடனடியாகக் கூட்டி இருக்கலாம்.

பெரும்பான்மை இருப்பதை ஒப் புக்கொண்ட பின்னரும், அமைச் சரவையை கவர்னர் 'டிஸ்மிஸ்' செய்தது புதுமையாக இருக்கி றது!"

இரா. செழியன் குற்றச்சாட்டு--மொரார்ஜி பதில்!

'பேசியது உண்மையானால் பெருந்தவறுதான்' என்கிறார்

புதுடில்லி, நவ. 23—

மக்களவையில் கொண்டுவரப் பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மா னத்தினீது நடைபெற்ற விவாதத் தில் குறுக்கிட்டு தமிழ்த் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய பேசுகையில், தேர்தல் பிரசாரத் தின்போது, 'காங்கிரசு, இராணு வத்தின் உதவியை நாடும்' என்று காங்கிரசுத் தலைவர் காமராசர் கூறினர்—என்ற இரா. செழிய னின் குற்றச்சாட்டு பற்றிக் கூறிய தாவது :—

"அரசியல் நிலைமை மோச மாகி—சட்டமும் ஒழுங்கும் பாதிக்கப்பட்டு — மக்களின் பொது வாழ்க்கை பாதிக்கப் படக்கூடிய நிலைமை ஏற்பட் டால், அப்போது, இராணு வம் வரக்கூடிய ஆபத்து ஏற் படும் என்றுதான் காமராசர் கூறினர்."

"க. அன்பழகன் (குறுக் கிடு) :—" சென்னையில் நடை பெற்ற பொதுக்கூட்டமொன் றில் காமராசர், 'தமிழக அர சின் கையில் போலீஸ் படை இருக்கிறது என்றால், அதைச் சமாளிக்க நாங்கள் இராணு வத்தைக் கொண்டுவந்து கல விரித்துக்கொள்வோம்' எனக் கூறவில்லையா? தமிழகத்தில் 'கேடோர்'க்கள் இல்லை; இந் நிலையில், காங்கிரசுத் தலைவர் இவ்வாறு பேசுவதற்குக் காரு ணமே வியோதல்லவா?"

மொரார்ஜி தேசாய் :—" இந்தக் கூற்றை நான் நம்பவில்லை; ஆனால், அவர் அப்படிப் பேசி யது உண்மையாக மட்டும் இருக்கு மேயானால், அது, பெருந்தவருகும்."

"அடிப்படையான அரசியல் நடைமுறைகளை பழிப்புக்கு ஆளாகப்பட்டுள்ளன.

மேற்கு வங்கம், அரியானு அமைச்சரவைகளை 'டிஸ்மிஸ்' செய்ததன் மூலம், அரசியல் சீழ் நிலையில் நச்சு கலக்கப்பட்டுள் ளது!

நமக்கு ஒரு சனாயக அரசியல் அமைப்பு இருப்பதாகச் சொல் லிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது; அரசியல் சட்ட உணர்வுகளைக் கடைபிடிக்க வேண்டும்.

முரசொலி மாறன் பதவி ஏற்றார்

புதுடில்லி, நவ. 23—

தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் பெரும்பெற்ற முரசொலி மாறன் எம்.ஏ. அவர்கள், இன்று பதவி யேற்றுக்கொண்டார்.

பதவி உறுதிமொழியை அவர் தமிழில் கூறியபோதும், மக்க யில் நுழைந்தபோதும் கழக உறுப் பினர்களும், எதிர்க் கட்சி உறுப் பினர்கள் கரவொலி செய்தனர்.

தலைமையமைச்சர் இந்திரா பேசிய தேர்தல் கூட்டங்கள்

செலவை ஏற்குமாறு தமிழ்நாடு காங்கிரசுக்குக் கடிதம்

'அமைச்சர்களின் கட்சிப் பிரச்சார செலவை அரசு ஏற்காது'---சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணு விளக்கம்

சென்னை, நவ. 24—

1967 சனவரி, பிப்ரவரி மாதங்களில் தமிழகத்திற்கு வந்த தலைமையமைச்சர் இந்திரா காந்தி—சென்னை, கோவை, உதகை, தஞ்சை, திருச்சி, மதுரை முதலான இடங்களில் நடந்த பொதுக் கூட்டங்களில் கலந்துகொண்டார் என்றும், அந்தப் பொதுக்கூட்டங் களுக்காக சு. 1,10,774 செலவாயிறு என்றும், கோவையில் நடந்த பொதுக்கூட்டத்துக்கு மட்டும் சு. 17,115 செலவிடப் பட்டது என்றும், தேர்தல் பிரசாரத்துக்காகவே இங்குக் கூட்டங் கள் நடந்ததால் அந்தச் செலவு முழுவதையும் தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அரசு எழுதியுள்ளதாக வும் தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டியும் இதற்கு இசைவு தெரிவித் திருப்பதாகவும் முதலமைச்சர் அண்ணு அவர்கள், சட்டமன்றத்தில், கழக உறுப்பினர் ஏ. எம். இராசா கேட்ட கேள்விக்குப் பதிலளிக் கையில் தெரிவித்தார்.

கே. விளுயகம :—"தலைமையமைச் சர் நாட்டுக்குத் தேவையான பல கருத்துக்களை எடுத்துச் சொல்லவே வந்தார்; அந்தச் செலவை அரசே ஏற்குமா?"

அண்ணு :—' தமிழ்நாடு காங்கிர சுக் கமிட்டியின் கருத்தும், கண் பர் விளுயகத்தின் கேள்வியும் முரண்படுகின்றன. தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டி, பணம் கொடுக்க இசைவு தெரிவித்துள் ளது தலைமையமைச்சர் இங்கு வந்து பேசிய கூட்டங்களிலெல லாம் பல கருத்துக்களைச் சொன்ன போதிலும், இறுதி யாகக் கூறியது, 'காங்கிரசுக்கு வாக்களியுங்கள்' என்பதுதான்; எனவேதான், அதைத் தேர்தல் பிரசாரமாகக் கருதி, 'செலவைக் காங்கிரசுக் கட்சி ஏற்கவேண் டும்' என்கிறோம்."

சீமைச்சரம் :—"தமிழ்நாடு காங்கி ரசுக் கமிட்டி இங்குப்பணத்தைத் தர மறுத்தால், அரசு என்ன நடவடிக்கை எடுக்கும்?"

அண்ணு :—"அவர்கள் தர மறுப் பார்கள் என்று நான் கருத வில்லை; அப்படித் தரமறுப்பார் களேயானால், நானே பொதுமக் களிடம் சொல்லி அவர்கள் சார்பில் பணம் வசூலித்துத் தருவேன்."

கே. விளுயகம் :—"தி. மு. கழக அமைச்சர்கள் பிரசாரத்துக்குச் செல்லுமபோது ஏற்படும் செலவு யாருடையது? அப்படித் தேர்தல் பிரசாரத்துக்கு அமைச்சர்கள் செல்வது தவிர்க் கம்படுமா?"

அண்ணு :—" ஆட்சித் தலைவராக வும், கட்சித் தலைவராகவும் இருப்பவர்களிடம் பிரித்துப் பார்ப் பது கடினம்; எனவே, தலைவர் களே ஒரு மரபை ஏற்படுத்திக் கொள்வது நல்லது. தி. மு. க. அமைச்சர்கள் கட்சிப் பிரசாரத் துக்காகச் சென்றால் கட்சியினர் சொந்தச் செலவிலும், அர சாங்கக் காரியமாகச் சென்றால் அரசாங்கச் செலவிலும் செல்லு மாறு ஒரு மரபை வகுத்துக் கொண்டு, அதன்படியே நடந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள் ளப்பட்டிருக்கிறார்கள்: இதில் ஏதேனும் தவறுகள் நிகழுமா னால், அதினச் சுட்டிக்காட்டி னால் கவனிக்கப்படும்."

மறைந்த பெரியார்க்கு இரங்கல்

தமிழகச் சட்டமன்றத்தில் மரியாதை

சென்னை, நவ. 24—

இன்று சட்டமன்றம் துவங்கிய தும், முதல் நடவடிக்கையாக, இரங்கல் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

பிரிட்டிஷ் தலைமையமைச்சராக இருந்த அட்லி பிரபு, முன்னள் சென்னை கவனர் சர் ஆர்ச் பால்டீ னை, நாடாளுமன்ற உறுப் பினரும் சம்பத்த சோவுலிஸ்டுக் கட்சித் தலைவருமான டாக்டர் லோகியா, முன்னள் சட்டமன்ற உறுப் பினர்களான அமைர் பேட்டை வெங்கடராமன், கே. பி. மேனன், திருப்பூர் டி. எஸ். இராங்க சாமி, திருச்செங்கோடு டி. எஸ். பட்டாபிராமன், மேலவை உறுப் பினர் டாக்டர் அ. சிதம்பரநாதர் னர், அகாலிதளத் தலைவர் மாஸ் டர் தாரா சிங் ஆகியோர் மறைவு குறித்து இரங்கலும், அவர்களது குடும்பத்தினருக்கு ஆறுதலும் தெரிவிக்கும் தீர்மானத்தை அவைத் தலைவர் முன்மொழிந் தார்.

அரசுக் கட்சித் தலைவர் அமைச் சர் இரா. நெடுஞ்செழியன், தீர் மானத்தை வழிமொழிந்து பேசு கையில், அகில உலக அரங்கில் புகழ் பெற்ற தலைவர்களாக விளங் கியவர் முதல் தமிழகத்தில் புகழ் பெற்றவர்கள் வரை—இவர்கள் அத்துணைப் பேருமை மறைவும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்' என்றார்.

எதிர்க் கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன், தீர்மானத்தை ஆதரித்து, மறைந்தவர்களின் சிறப்பியலுங்களையும் அவர்கள் ஆற்றிய அரும்பணிகளையும் புகழ்ந் துரைத்தார்.

பின்னர், அவையினர் அனை வரும் ஒரு நிமிட நேரம் எழுந்து மௌனமாக இருந்து தீர்மா னத்தை ஏற்றனர்.

20 ஆண்டுகளாக உழுத் தொழிலைப் புறக்கணித்ததன் விளைவு!

இரவல் உணவுக்காக அமெரிக்காவுக்குச் செல்லும் இழிநிலையடைந்தோம்!

இடைவிடாது பாடுபட்டால் நம்மை மிஞ்சக்கூடிய வல்லமை யாருக்கும் இருக்காது!

ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய வரவேற்பில் அறிஞர் அண்ணு விளக்கம்

கடந்த 17—11—67 அன்று, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில், அரியலூர்—வாணுபுரத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம்—கால்நடை மருத்துவமனை—வேளாண்மைக் கிடங்கு ஆகியவற்றின் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றதையொட்டி, முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்களுக்கும், வேளாண்மை பயைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கட்கும் அளிக்கப்பட்ட மாபெரும் வரவேற்புப் பொதுக்கூட்டத்தில், அண்ணு அவர்கள், வரவேற்புக்கு நன்றி தெரிவித்து ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது :—

உழைப்பிலே ஆர்வமிக்க தோழர்களின் சீரிய பணி

"தெ. ஆ. மாவட்டத்திலேயே இந்தப் பகுதி, நமது கழகத்தினிடத்திலேயும், பொதுத் தன்மையிலும் மிக உணர்ச்சி மிக்கத் தோழர்கள் ஆயிரம் ஆயிரமேபோ நிரம்பிய பகுதியாகும். அத்தகைய உணர்ச்சி மிக்கத் தோழர்களால், 'இங்குப் பகுதிக்கு நல்ல பல காரியங்கள் நடக்கவேண்டும்; அதிலும் பஞ்சாயத்துக்களாலும், பஞ்சாயத்து யூனியன்களாலும் அங்குக் காரியங்களெல்லாம் நடக்க வேண்டும்' என்னும் பெரிதும் விரும்பிக் கொண்டிருக்கிறவர்கள்.

அப்படிப்பட்ட உழைப்பாளிகள் நிரம்பியிருக்கின்ற இந்தப் பகுதியில், ரிஷிவந்தியம் பஞ்சாயத்து யூனியன் தலைவராக, இனிஞருமான வழக்கறிஞரும் பாராளுமன்ற உறுப்பினரும் என்னுடைய நண்பருமான தெய்வீகன் அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றுவதற்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

அவர் இப்புரசாயத்து யூனியன் தலைவராகப் பணியாற்றுகின்ற நேரத்தில், கிராமங்களில் உள்ள அத்தனைப் பெரியவர்களும் அவ ரோடு ஒத்துழைக்கவேண்டும் என்று அவர்கள் நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அவரிடத்தில் மாறுபாடு கொண்ட அரசியல் கட்சிக் காரர்களுட, அந்த இனிஞருடன் ஒத்துழைக்கவேண்டும்.

சுயநலத்திற்கா அவர்கள் பாடுபடுகின்றனர் ?

நமக்கு இப்படிப்பட்ட இனிஞர்கள் — படித்தவர்கள் — வழக்கறிஞராக உள்ளவர்கள்—பாராளுமன் றத்தில் உறுப்பினராக இருப்பவர்கள் கிடைப்பது என் பது எளிதான காரியமல்ல.

பத்து வருடத்துக்குமுன்னுல இப்படிப்பட்ட வழக்கறிஞர்கள், தங்களுடைய வழக்கறிஞர் தொழில் நடத்திப் பொருளை ஈட்டிக்கொள்வதிலேதான் அக் கறையாயிருந்திருப்பார்கள்.

இன்றையதினம் இப்படிப்பட்ட இனிஞரெலலாம் — தாங்கள் வழக்கறிஞராக இருந்தும் — பொருளீட்டுவதிலும் தங்களுக்காகச் சேர்த்துக்கொள்ளும் சுயநலக் காரியத்தில் அதிகமாக நாடுபடாமல், 'பொதுமக்களுக்குத் தொண்டாற்றவேண்டும்' என்ற எண்ணத்தில், இப்படிப்பட்ட பஞ்சாயத்து யூனியன்களின் தலைவர்களாகத் தேர்ந்தெடுக் கப்பட்டு நல்ல நிலையிலே பணியாற்றிவருகிறார்கள்.

அப்படிப்பட்டவர்களை நாம் தந்த முறையிலே பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

வசதிக்கு வாய்ப்புண்டு

பஞ்சாயத்து யூனியன்கள் நல்ல முறையில் பணியாற்றினுல், அந்த மாவட்டத்தினுடைய நிலை மையை நாம் மிக வேகமாக—மிகச் செம்மையாகத் திருத்தியமைக்க முடியும். அதற்கேற்ற வாய்ப்பும் வசதிகளும் பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளன.

பல பஞ்சாயத்துக்களை ஒன்ருக இணைத்து—பஞ்சாயத்து யூனியன்கள் அமைத்து — அந்தப் பஞ்சாயத்து யூனியனமூலம் அந்தக் கிராமங்களுக்குத் தேவைப்படுகிற குடிதண்ணீர் வசதி—பள்ளிக்கூட வசதிகள்—படிப்பக வசதிகள்—மருத்துவமனை வசதிகள்—பாதை வசதிகள்—இவைகளையெல்லாம் ஏற்படுத் திக்கொள்ள வசதி செய்யப் பட்டிருக்கிறது.

குறைகளைக் களைவோம்!

ரிஷிவந்தியத்துக்கும், இங்கு அரிய ஊருக்கும் தருத்த முறையில் பாதை அமைப்பு இல்லை என்று கேள்விப்பட்டு மிக்க வருத்தப் படுகின்றேன் — கவலைப்படுகின் றேன்.

அதற்குப் பாதை அமைக்கின்ற காரியத்தில் எந்த அளவுக்கு அக்கறை காட்ட முடியுமோ அந்த அளவுக்கு அக்கறை காட்டுவோம் என்றும் உங் களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாவட்டத்தின்கலெக் டர் அவர்களும் வந்திருக்கிருர் கள் ; அவர்களும் இதில் அக் கறை காட்டுவார்கள் என்ற நம் பிக்கை எனக்கு நிரம்ப உண்டு.

மிகப் பெரிய பெருமை!

உங்களுடைய குறைகள் எது வாக இருந்தாலும் அவற்றைக் கவனிக்கப் பஞ்சாயத்துத் தலை வர்கள், சட்டமன்றத் தலைவர் கள், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியவர்கள் இருக்காமலும், உங்களுடைய தெ. ஆ. மாவட் டத்துக்கென்று நம்முடைய அமைச்சர் கோவிந்தசாமி அவர் கள் உங்களிடத்தில் இருக்கி றார் ; அவர் இங்குப் பகுதியில் சுற்றுத்த கிராமம் இல்லை—பார்க் காத ஆள் இல்லை—பழகாதவர் களும் அதிகம் பேர் இருக்கமுடி யாது.

அப்படிப்பட்டவர் வேளாண்மை அமைச்சராக அமைந்திருப்பது தெ. ஆ. மாவட்டத்துக்கு மிகப் பெரிய பெருமை எனலாம், மிகச் சிறந்த வாய்ப்பு எனலும் நான் கருதுகின்றேன்.

தெ. ஆ. மாவட்டத்தைச் சேர்ந்த நம் அருமை நண்பர் கோவிந்த சாமி அவர்கள் வேளாண்மை அமைச்சராக அமர்ந்து—உணவு உற்பத்தியில் மிகுந்த அக்கறை காட்டி — அதில் குறிப்பிடத்தக்க வெற்றியும் பெற்றிருக்கிறார். அப்படிப்பட்ட ஒரு சிறந்தவர் இந்த மாவட்டத் தைச் சேர்ந்தவர் என்பதில் நாமெல்லாம் மிகுந்த பெருமைப் பட்டுக்கொள்ளக்கூடும். அவருடைய சிறந்த உதவியினு இந்தப் பஞ்சாயத்து யூனியனும், அதில் அடங்கிய சிற்றூர்களும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகின்றேன்.

ஆவன செய்யும் அரசு

இந்தப் பஞ்சாயத்து யூனியனின் அதிகாரங்களும், பஞ்சாயத்துக் களின் அதிகாரங்களும் தக்க முறையில் திருத்தி அமைக்கப் பட்டு, அவைகளுடைய பணி மேலும் சிறப்படையத்தக்கத் தருத்த நடவடிக்கைகளேத் தமி ழக அரசு இன்று யோசித்துக் கொண்டிருக்கிறது.

அதைத் தமிழக அரசை உண் டாக்கிக் கொடுத்தவர்களை இன் றையத்தினம் என் எதிரில் அமர்ந்திருக்கின்ற பல்லாயிரக் கணக்கான மக்களான நீங்கள் தான்!

நல்ல வாய்ப்புக் கிடைத்தது!

நாம், இந்தத் தெ. ஆ. மாவட்டத் தில் — களைகுறிச்சிப் பகுதி யில், ஒரு பிரமாண்டமான மாநாட்டை போன வருடத் திலே நடத்திய நேரத்தில், நாம் இந்த அளவுக்கு — ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தக்க அளவுக்கு நாட்டு மக்க ளின் நல்லாதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை ஒரு சிலருக் குத்தான இருந்தது; பலர், 'அந்த மாநாடு எனபது ஏதோ வேடிக்கைக்காக— பொழுது போக்குக்காக,— கண்கவர்ச்சிக் காக அமைக்கப்பட்டது' என்று கருதினர்கள்; ஆனுல், 'கள் ளக்குறிச்சி மாநாட்டின் மூலம் தெ. ஆ. மாவட்டம் எவ்வளவு எழுச்சியோடு இருக்கிறது— எவ்வளவு உணர்ச்சியோடு இருக்கிறது' என்பதைத் தெரிந்து கொள்வதற்கு நமக் கும் நாட்டுக்கும் ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தது.

உண்மையான பெருமை!

அந்த மாநாட்டுக்குப் பிறகு பொதுத்தேர்தல் நேரத்தில் நான் இங்குப் பகுதிகளுப் பல இடங்களுக்கு வரவேண்டும் என்று எவ்வளவோ விரும்பி யிருந்தும் வரமுடியாமற் போன தற்காக உள்ளபடியே நான் கவலைப்படுகிறேன்.

ஆனுல் நான் வராமலேயே வெற் றியைத் தேடிக் கொடுத்தது தான் உங்களுக்கு உண்மை யான பெருமை!

நான் வந்து அதற்குப் பிறகு வெற்றி பெற்றிருந்தால், அந்த வெற்றியில் எனக்குக்கூட ஒரளவு பங்கு கிடைத்திருக்கும்— முழுதாக உங்களுக்குக் கிடைத் திருக்காது ; ஆனுல், இங்கே நான் வராமலேயே நீங்கள் வெற்றி பெற்றதாலே அந்த வெற்றிகானபெருமை முழுக்க முழுக்க உங்களுக்கே சொந்த மாக அமைந்திருக்கிறது. நீங் கள் அதிலே வல்லவர்கள் என்ற நம்பிக்கையாலேதான — நான் இங்குப் பக்கத்திற்கு வருவதற்கு எனக்கு நேரம் கிடைக்கவில்லை என்பதாலே—அப்போது அதிக மாகக் கவலைகொள்ளவில்லை!

நாம் பாடுபட்டாலன்றி!

நம்முடைய தோழர்களுக்குப் புதி தாக ஊரவத்தைத் தூண்ட வேண்டும் என்ற ஆசை எனக்கு என்றும் ஏற்பட்டதில்லை; அவ வளவு ஆர்வமிக்க தோழர்கள் இதில் நமக்குக் கிடைத்திருக் கிறார்கள் ; அவர்கள் இதுவரை, 'ஒரு நல்ல ஆட்சி ஏற்பட வேண்டும்' என்பதற்காகப் பாடு பட்டார்கள். இப்போது ஒரு ஆட்சி ஏற்பட்டிருக்கிறது; ஏற் பட்டிருக்கிற இந்த ஆட்சியை நல்ல ஆட்சியாக நாம் நடத்திச் செலலவேண்டும்.

நாம் வந்துவிட்டதாலேயே அந்த ஆட்சி, நல்ல ஆட்சி ஆகி விடாது; நாம் முயன்றுல் ஒழியாம்நாம் பாடுபட்டாலொழி யாம்—நாம் அக்கறையோடும ஆர்வத்தோடும் அசிலோ ஈடுபட் டாலொழிய அது நல்ல ஆட்சி யாகத் தன்னுலே ஆகிவிடாது!

"ஒருவருக்குத் தனகோடி என்ற பெயரைச் சூட்டிவிட்டவுடன், அவரிடத்தில் கோடி ரூபாய் வந்துவிடாது! ஒருவருக்குத் தாண்டவராயன் எனறு பெயர் வைத்தவுடன் அவர் எவலளவு தூர மாளுலும் தன்னுலே தாண்டிவிடமாட்டார்!

"அதைப்போல், நம முடைய ஆட்சி வந்துவிட்டதாலே, அது தன்னுலே நல்ல ஆட்சியாகி விடாது! அது நல்ல ஆட்சி ஆவதற்கு நீங்களும் நானும் இடைவிடாது பாடுபட வேண் டும்.

"அப்படிப்பட்ட ஒரு நல்ல ஆட்சி என்னென்ன செயயவேண்டும் என்பதைப் பல ஆண்டுகளாக நாம் கனவு கண்டுவந்திருக்கி றோம்; மக்களிடத்திலேயெடுத்துச் சொல்லிவந்திருக்கிறோம்; அந்த இலட்சியங்களெல்லாம் நிறை வேறத்தக்க விதத்தில் நாம் ஒவ வொருவரும் பாடுபடவேண்டும்.

பொறுப்பு உங்களிடம்!

"நல்ல ஆட்சி அமைக்கப்பட வேண்டுமானுல், தோட்டப யிலே வீற்றிருக்கின்ற எட்டு—ஒன்பது மந்திரிமார்களால் மட் டும் அந்த நல்ல ஆட்சி ஏற் பட்டுவிடும் என்று நாம் கருதக் கூடாது; மந்திரிமார்கள் கோட் டையிலே அமர்ந்திருப்பது, உங் கள் சார்பிலேயும், உங்கள் எண்ணங்களை அறிந்து அவை களுக்குத் தருந்த விதத்திலே திட்டங்களை வகுப்பதற்கும் தானே தவிர, வகுத்தளிக்கின்ற திட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்கின்ற பொறுப்பு கிரா மங்களிலே உள்ள உங்களிடத் திலேதான் அமைத்திருக்கிறது.

அன்று சொன்னது இது!

நான் பதவி ஏற்றுக்கொண்ட அன்றையத்தினம் வானுலி யில் பேசியதை மறுடியும் உங்கள் நினவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன்—

"வயலிலே கதிர்கள் முற்றி, காற்றிலே அதகாக அசைக் தாடிஞலுதான் கோட்டை யிலே இருக்கின்ற மந்திரிமார் கள் மகிழ்ச்சியாக இருக்க முடி யும்; வயல காய்ந்தால் கோட்டை எவலளவு உயர மாக இருந்தாலும—அதிலே கொலு வீற்றிருப்பவர் யாராக இருந்தாலும் அவர்கள் தலை வணிந்து கொண்டுதான் வாழ்க்கை நடத்த வேண்டி வரும்"

புறக்கணித்ததன் விளைவு!

ஆகையினுலேதான் நமது தமிழ் பெருங்குடி மக்கள், 'செங் கோல் நடத்துவது ஏரடிக்கும் சிறு கோலதான்' என்று உழ வுக்கு முதலிடத்தைக் கொடுத் தார்கள்!

அந்த உழவுத் தொழிலை நாம் கடந்த 20 ஆண்டுளாகப் புறக் கணித்துவிட்டதன் விளைவுதான், நாம் இன்றையத்தினம் விசுவாசியைக் நிரம்பியிருக்கின்ற நம்முடைய நாட்டிறகுத் தேவை யான உணவிற்காக, தொழில் துறைகள் நிரம்பியிருக்கின்ற அமெரிக்காவுக்குச் சென்று இரவல் உணவைக் கேட்கின்ற இழிதன்மையிலே இருக்கின் றோம்!

உணர்ந்த காரணத்தால்!

அதை உணர்ந்திருக்கிற தமிழக அரசு—அந்தத் தமிழக அரசை நடத்துவதற்காக திராவிட முன் னேற்றக் கழகம் பொறுப்பேற் றுக்கொண்டவுடன், ஒரு உழ வர் பெருங்குடி மகன்—நம்மு டைய நண்பர் கோவிந்தசாமி அவர்களே வேளாண்மை அமைச்சராக அமர்த்தி இருக் கிறது!

விவசாயத் துறையிலே ஈடுபாடாத பலர் விவசாய அமைச்சர்களாக இருந்த காலமும் ஒன்று இருந் தது ; ஆனுல் நம்முடைய நண் பர் கோவிந்தசாமி அவர்கள், விவசாயத் துறையிலே நல்ல விதத்திலே அக்கறை செலுத் தக்கூடியவர் — உழவர்களிடத் திலே நன்றுகப் பழகக்கூடிய வர்!

அதனுலிதான் இந்த நிலை!

அப்படிப்பட்ட ஒரு சிறந்த நண் பர் நமக்கு விவசாய அமைச்ச ராகக் கிடைத்திருக்கின்ற காரணத்தாலே, உங்களுடைய தெ. ஆ. மாவட்டம் போன வருடத்தில் பற்றுக்குறை மாவட்ட மாக இருந்தது, இந்த வருடத் திலே உபரி மாவட்டமாக மாற்றப்பட்டிருக்கிறது.

அதுபோலவே தமிழகம் முழுவ தும் போன வருடத்திலே இருந் ததைவிட இந்த வருடத்திலே உணவு நெருக்கடி பெருமளவுக் குக் குறைக்கப்பட்டு—உற்பத்தி நல்ல அளவுக்கு வளர்ச்சி யடைந்து—புதிய புதிய விவசாய முறைகள்—புதிய புதிய பாசன முறைகள்—புதிய முறையிலே விதைகளைத் தெளிக்தல், ஆகிய காரியங்களில் தமிழகம், இங் தியாவின் மற்றப் பகுதிகளுக்கு இன்றையத்தினம் வழிகாட்டி யாக இருக்கின்றது.

இந்தியாவிலேயே இன்றையத் தினம் நல்ல விவசாயிகள் என்று பெயரெடுத்திருக்கின்றவர்கள், நம்முடைய தமிழ்நாட்டிலும், நம் முடைய மாவட்டக் கலெக்டரு யைய மாகிலமான பஞ்சாபிலும் தான் இருக்கிறார்கள் என்பதை உலகமே ஒப்புக்கொண்டிருக் கிறது!

ஆனுல், பஞ்சாபில் தண்ணீர் வசதி அதிகம்; ஐந்து ஆறுகள் அவர்களுக்கு அணி செய்து கொண்டிருக்கின்றன! நமக்கு அப்படிப்பட்ட ஆறுகள் அதிகம் இல்லை!

பெருமையாகப் பேசினுலும்!

நாம் காவிரியைப் பற்றிப் பெருமையாகப் பேசினுலும், அது, இம்மாநிலத்திலிருந்து புறப்படுகிற ஆறு அலல ; மைசூரிலிருந்து அது கிளம்பி— 'போகலாமா, வேண்டாமா?' எனறு தயக்கத்தோடு புறப் பட்டு—அதற்குப்பிறகு 'போயது தொலைப்போம்' எனறு அசைரத் தில் கிளம்பி—பெரிய மனிதத் தமிழகத்திற்கு வந்து சேருகிற சேரதியில், மேட்டூரிலேதான அருமையான அணையைக் கட்டி, அதனுலமாகக் நீர்ப் பாசன வசதியை நம்முடைய தமிழகத்திற்குப் பெற்றிருக் கிறோம்!

உங்களுடைய மாவட்டத்துக் கென்று அமைந்திருக்கின்ற ஆறு தென பெண்ணையாருகும். பாரதியாருடைய பாடலில்,

'காவிரி தென் பெண்ணை
பாலாறு.....'

என்று பெருமையாகச் சொல் லியதில், தென் பெண்ணயாற் றுக்கு ஒரு நல்ல இடத்தைத் தமது இலக்கியத்தில் அளித் திருக்கிறார்.

தரித்திரத்தை ஒழிப்போம்!

அந்தத் தென் பெண்ணைக்கு நீங் கள் சொந்தக்காரர்கள்—திரு வெண்ணெய்நல்லூருக்கு நீங் கள் சொந்தக் காரர்கள்— கரும்புத் தோட்டங்களுக்கு நீங்கள் சொந்தக்காரர்கள்— மணலூர்ப் பகுதிக்கு நீங்கள் சொந்தக்காரர்கள் — 'கரும்புத் தங்கம்' என்று பெயர் பெற்ற நிலக்கரித் சுரங்கங் களுக்கு நீங்கள் சொந்தக்காரர்

(3-ம் பக்கம் பார்க்க)

சென்னை நக்கீரர் கழகம்

கவிதை -- கட்டுரைப் போட்டி

சென்னை நக்கீரர் கழகச் சார்பில் தமிழத் தென்றல் திரு.வி.க. அவர்கள் நினைவாகவும், டாக்டர் தருமாம்பாள் அவர்களது நினைவாகவும் கட்டுரைகள் போட்டிப் பரிசுகளும், டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களது நினைவாகக் கவிதைப் போட்டிப் பரிசுகளும் வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

போட்டிகளின் முதற பரிசு வெள்ளிக்கோப்பை (ரூ 25மதிப்பு); இரண்டாம் பரிசு வெள்ளிப் பதக்கம் (ரூ. 15 மதிப்பு); மூன்றாம் பரிசு ரூ. 10 மதிப்புள்ள தமிழ் நூல்கள்.

இப்போட்டிகளுக்கு எல்லாக் கலலூரி இளங்கலை வகுப்பு மாணவிகள் மட்டும் கலந்துகொள்ளலாம்; கட்டணம் இல்லை; ஆனல், அஞ்சல் செலவுகளுக்கு 25 காசு மதிப்புள்ள அஞ்சல்தலை மட்டும் அனுப்பிவைத்தால் நலம்.

ஒரு கலலூரிக்கு 3 இளங்கலை வகுப்பு மாணவிகள் மட்டுமே ஒவ்வொரு போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம்; கட்டுரைகளும் கவிதையும் தூயதமிழ் நடையில் இருத்தல் வேண்டும். மாணவிகளை நங்கள் கட்டுரைகளையும், கவிதைகளையும், தமிழத் துறைத் தலவர் சான்றிதழோடு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கடடுரை :—திரு. வி. க. நினவுப் பரிசு—'தாய்மொழியே பயிற்சி மொழி'; டாக்டர் தருமாம்பாள் நினவுப் பரிசு:— 'சீர் ரணியும் சேயிழையாரும்' (இப்பொருள் கொண்ட பற்றிய கட்டுரைகள் 150 வரிகளுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்).

கவிதை :— டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை நினவுப் பரிசு— 'இளஞாயிறு' (இப்பொருண்மைப் பற்றிய கவிதை ஆறு வெண்பாக்களுக்கே அல்லது நாற்பது வரிகட்கு மேற்படாத ஆசிரியப்பாவாகவோ இருக்கவேண்டும்)

மேற்படி கட்டுரைகளையும் கவிதைகளையும், 1967 டிசம்பர் 10-ம் நாளுக்குள், 'செயலாளர், நக்கீரர் கழகம், 27, பின்னியப்பர் கோயில் தெரு, தண்டையார்பேட்டை, சென்னை-21' என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

கட்டுரைகளையும் கவிதைகளையும் முறையாக பார்வைக்கு அனுப்பி, வெறறிச் செய்தி 1968 சனவரி 5-ஆம் நாள் வெளியிடப்படும். பரிசு பெற்ற கட்டுரை களும், கவிதைகளும் தமிழகத்தில் உள்ள சிறந்த திழமை இதழ்களில் வெளியிடப்படுமென.

"பரிசு பெற்றவர்களுடைய பரிசுகளை 1968 சனவரித் திங்களில் நடைபெறும் தமிழத் திருநாளில் வழங்கப்படுமென; தமிழத் திருநாள் அழைப்பு முறையே அனுப்பப் படுமென்" என்று, நக்கீரர் கழகப் பொதுச்செயலளர் சிறுவை நக்சிஞர்கிளியர் அறிவிக்கிறார்.

செந்தாரப்பட்டியில் மா. முத்துச்சாமி

பேரூராட்சியில் அறிஞர் அண்ணு உருவப் படம் திறப்பு

செந்தாரப்பட்டி பேரூராட்சி மன்றத்தின் சார்பில் 8—11—67-ல் உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்களுக்கு வர வேற்பு இதழும், தேரீர் விருந்தும் அளிக்கப்பட்டது; பின், முதலமைச்சர் அண்ணு அவர்களின் உருவப் படத்தை அமைச்சர் திறந்துவைத்தார்.

அரினை காலனி தெரு மின் விளக்குகளை ஏற்றிவைத்து வர வேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

கழகக் கிளைகள் — கூட்டுறவு நாணய சங்கம்—எம். ஜி. ஆர். மன்றம்—விவசாயிகள், வியாபாரிகள், சுருட்டுத் தொழிலாளர்கள் ஆகியோர் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

செந்தாரப்பட்டிக்கு மேல் கிலே நீர்தேக்கத் தொட்டி ஒன்று அமைத்துக் கொடுப்பதாக அமைச்சர் உறுதியளித்தார்.

அருப்புக்கோட்டையில் இரா. நெடுஞ்செழியன்

சிறப்புமிக்க வரவேற்பு -- நிகழ்ச்சிகளில் பங்கேற்பு

8—11—67 மாலை 4-மணியள வில் அருப்புக்கோட்டை எஸ். பி. கே. உயர்நிலப் பள்ளியில் நடைபெற்ற இராமாதபுரம் மத்திய மாவட்ட செகண்டு கிரேடு தலைமை ஆசிரியர்கள் மாநாடு—பாரியம் பட்டி ஊராட்சி—அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்—அருப் புக்கோட்டை நகராட்சி ஆகியவை சார்பில் அளிக்கப்பட்ட வரவேற பினை, கலவி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஏற் றுக்கொண்டார்.

இரவு 8 மணியளவில் தியாக ராயர் திடலில் நகர தி. மு. க. சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

கூட்டத்திற்கு இராமாதபுரம் மாவட்ட அவைத் தலவர் சின. சண்முகசுந்தரனர் தலைமை தாங் கினர்.

தோழர்கள் மாங்குடி மதியழ கன், எஸ் எஸ். தென்னரசு, பி. பி. என். நலலதம்பி ஆகியோர் பேசிய பின், அமைச்சர் நெடுஞ செழியன் பேச எழுந்தார்; அவருக்கு தகை தமி ஆடைகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

பின்னர் கலவி அமைச்சர், சுமத ஆட்சியின் சாதனைகளையும், எதிர்க் கட்சியினரின் தவருன பிரச்சாரத் தையும், அண்ணுவின் அறிவாற் றல் பற்றியும் விளக்கி உரையாற் றினர்.

அறிஞர் அண்ணு விளக்கம்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கள்—இத்தணைக்கும் சோந் தக்காரர்களான இந்த மாவட் டத்து மக்கள், தரித்திரத்துக் கும் சோந்தக்காரர்களாக இருந்துவருகிறார்கள்!

வெகு விரைவில் இந்த நிலை மாற்றியமைக்கப்பட்டாக வேண்டும்.

இந்தத் தரித்திர நிலமை மாற்றியமைக்கப்பட வேண்டுமானால், இருக்கின்ற செல்வத்தை இன னும் அதிக அளவுக்கு வெளியே கொண்டுவர வேண்டும்; அதி லும், விஞ்ஞானத்தோடு இணைத்து, அப்படி அதிகரிக்கப் படுகின்ற பலன் சமூகத்தில் எல் லாப் பிரிவினருக்கும் கிடைக்கும் விதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

இத்தகைக் காரியங்களும் மலே போல் நம் முன்னுலே காத்துக் கொண்டிருக்கின்றன; இதை நாளை, கோவிந்சாமியே செய்து முடித்துவிட முடியும் என்று நீங்கள் எங்களிடத்தில் மட்டும் ஒப்படைத்தால், எங்க ளால முடிந்த அளவுக்குத்தான் செய்யமுடியும்.

ஆகையால், நீங்ள் ஒவ்வொரு வரும் எங்களுக்குப் பக்கத் துணை யாக இருந்து பணியாற்றினால், வல்லவர்கள் வாழ்கின்ற ஒரு கோட்டமாக இந்த மாவட் டத்தை மாற்றியமைக்க முடி யும்.

வெற்றிபெ இயலாதா?

'அப்படிப்பட்ட நிலேயில் நம்மு டையை முன்னேறுகள் வாழ்நாற் கள்' என்ற இலக்கிய ஆதாரங் கள், கல்வெடுகள் நமக்கு நிரம்ப இருக்கின்றன.

டைக்க காலத்தில்—ஒரு பெரிய யானே சேறறில் இறங்கிவிட் டால், அது வெளியே வருவதற் காக முயற்சி செய்யச் செய்ய, அதன் பலுவே அதனே மேலும் சேறறிலே அழுத்தி விடுவதைப் போல—நம்முடைய பழைய பெருமையே நம்மை மேலும் மேலும் அடிபலே கூட்டிச் சென்றுவிட்டது!

நாம் முயற்சி எடுத்து நம்முடைய பழமைக்குத் தக்கபடி—உலகத் தினுடைய புதுமைக்குத் தக்க படி தொழில் துறைகில் முன் னேறறமடைய வேண்டும். அதற்கு ஏற்றவகையில் பாடு படுவதற்கான காலம்—சூழ்நிலே இப்போது அமைந்திருப்பதைத் நான் உங்களுடைய கவனத் துக்குக் கொண்டுவருகிறேன்.

அதிலே நாம் வெற்றிபெற முடி யும் என்பதைக் காட்டும் வகை யில், இந்தப் பஞ்சாயத்து யூனி யன் தலவராக நமது நண்பர் தெய்வீகனும், அமைப்போல பல பஞ்சாயத்துக்களில் நமது கழகத் தோழர்களும் தீவிரமாக நலல பல காரியங்களில் ஈடு பட்டு உழைத்துவருகின்றனர்!

ஆர்வத்தின் விளைவு அது!

இன்று காலையில் கட்டளாரிலே நடந்த சீரணித் துவக்க விழா வின் அனிவகுப்பு நேரத்தில், அவர்களெல்லாம் அணிவகுத்து நின்றதைப் பார்த்து நான் பெருமைப்பட்டுக் கொண்டேன். இனறையத்தினம் அவர்கள் சீரணியில் எவ்வளவு ஒழுங் காக நின்றார்களோ அதைப் போல இந்த இருபது வருட காலத்தில் அவர்கள் இருந்திருப் பார்களானல், இந்த மாவட்டம் எப்போதோ முன்னேறத் திற்கு வந்துவிட்டிருக்கும்; ஆனல், இனறையத்தினம் யார் யார் எங்கெங்கு இருக்க வேண் டுமோ அங்கெல்லாம் — அவ ரவர்களுக்கென்று குறிக்கப் பட்ட இடத்தில இருந்ததைக் கண்டேன்.

இதற்கு முன்னும், இந்தப் பகு திக்கு வந்து, 'எங்கே நாச்சியப் பன்' என்று கேட்டால், 'அதோ அந்தப் பக்கம்' என்பார்கள்; 'எங்கே கெடுமாறன்' என்று கேட்டால், 'இதோ இந்தப் பக்கம்' என்று காட்டிக்கொண் டிருப்பார்களே தவிர, அவரவர் கள்—போர் வீரர்கள், இடத் தைத் தேர்ந்தெடுத்து அதே இடத்தில் நிற்பதைப்போல— நம்முடைய கழகத் தோழர்கள் இருந்ததில்லை; அக்கறை இல் லாததாலே அல்ல—ஆர்வம் மிஞ்சியதாலே, அவரை வேலை செய்யச் சொல்ல, இவர் அந்த வேலேயைச் செய்ய சென்று விடுவார்!

பயிற்சி பெற்றுவிட்டால்!

'நாச்சியப்பா! சரியாக வேலே செய்' என்று நெடுமாறன் சொல்லப் போக—'நெடுமாற னுக்கு கூப்பிடுங்கள்' என்று இராமகிருஷ்ணன் போக—இப் படி ஆளுக்கு ஆள் பின்னல் போட்டுக்கொண்டு இருந்தார் களே தவிர, ஒரே இடத்தில் இருந்து நல்ல முறையில் அணி வகுத்து நிற்பதற்கு இன்றையத் தினம் இந்தச் சீரணினால பயன் பட்டது!

நம்முடைய நண்பர்களெல்லாம் சீரணியில் இருந்த நேரத்தில் உற்றுப்பார்த்தேன்; முன்பெல் லாம் எனனப் பார்த்தவுடன் அவர்கள் மகிழ்ச்சியால் துள்ளு வார்கள். ஆனல இந்த அணி வகுப்பு என்றவுடன், 'அப்படித் துள்ளக்கூடாது' என்ற கட்டுப் பாட்டை அவர்களே ஏற்படுத் திக்கொண்டு, இருக்கவேண்டிய இடத்திலேயே இருந்தார்கள்!

இந்த வகையிலேயே நாம் ஒரு ஐந்து வருடத்துக்குப் பயிற்சி பெற முடியு வேமேயானல், நம்மை மிஞ்சக்கூடிய வல்லமை படைத்தவர்கள், தமிழகத்தில் அதிகம் பேர் இருக்கமுடியாது.

ஆகையினலே, இந்தச் சீரணி யின் மூலமாகவது வேளண் மைத் துறையைச்சார்ந் உங்களி டத்தில் எடுத்துச் சொன்னபடி —எந்தச் சிறறருக்கும் ஏரி, குளம் குட்டைகளச் செப்பனிடு தல—வயல்களச் செம்மைப் படுத்துதல — பளளிக்கூடங் களுக்குக் கட்டிடங்களை கட்டு தல—மருத்துவமனைகள அமைத் தல் போன்ற பல்வேறு காரிய களுக்குச் சீரணியின் உதவி தேவை என்றல, அதைப் பயன்படுத்திக் கொள்வதற்கு—அதைச் செய்துகொள்வதிலே நீங்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டு —அந்தச் சீரணியையும் நீங்கள தக்க முறையில் பயன்படுத்தி வெற்றி காணவேண்டும் என் றும் உங்கள் ஒவ்வொருவரை யும் நான் பணிவன்போடு விரும்பி வேண்டிக் கொள் கிறேன்.

இன்று எனக்கும், நண்பர் கோவிந்சாமி அவர்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் சார்பி லும், பஞ்சாயத்துக்கள் சார்பி லும், பளளியாசிரியர்களின் சார் பிலும் அளிக்கப்பட்ட வாழ்த்துப் பத்திரங்களுக்காகவும், எங்களி டத்தில் ஒப்படைக்கப்பட்ட தீ பிடித்து கிவாரண நிதிக்காகவும், நாங்கள் பெரிதும் கடமைப்பட் டவர்களாக இருக்கிறோம்.

நாங்கள் மேற்கொண்டிருக்கிற முயற்சிகளுக்கு உங்கள் ஒத் துழைப்பு நலல முறையில் கிடைக்கும் என்பதற்கு இன் றைய விழா ஒரு முன்னறி விப்புபோல அமைந்திருக் கிறது என்பதை, நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்து உங்கள் ஒவ் வொருவருக்கும் என் வணக்கத் தைக் கூறி விடை பெறு கிறேன்."

புது மாநிலக் கோரிக்கை

கட்டாக், நவ. 24—

ஜார்கண்ட் கட்சியைச் சேர்ந்த பீகார், ஒரிசா, மேற்கு வங்கள மலைசாதித தலவர்கள் புதிய மாநிலக் கோரிக்கை ஒன்றைக் கிளப்பியுளளனர்; 'ஜார்கண்ட் மாநிலம்' ஒன்று அமைக்க வேண்டும் என்பதே இவர்களின் கோரிக்கை.

''பீகார், ஒரிசா, மேறகு வங்கா ளம் ஆகிய மாநிலங்களிலுள்ள பொருளாதார அரசியல்—சமூக முன்னேறறத்திற்காக ஜார்கண்ட் மாநிலம் அமைக்கப்பட வேண்டி யது அவசியம்'' என்று, இவர்கள் கோருகிறார்கள்.

கரும்பக்குடி சிரணியினருக்கு பயிர்ப் பாதுகாப்புப் பயிற்சி

அதிகாரிகளின் முயற்சி

19—11—67-ல், கரம்பக்குடி வட்டாரத்தைச் சேர்ந்த சீரணி யினருக்கு, பயிர்ப் பாதுகாப்பு சம்பந்தமாக விரிவான முறையில் பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சி வகுப்புக்கு புதுக் கோட்டை மாவட்ட வேளாண்மை அதிகாரி ஜெயராஜா தலமை வகித்தார்; சீரணியின் அமைப்புப் பற்றியும், முக்கிய வேலைகள் குறித் தும், பயிர்ப் பாதுகாப்பில் எவ் வாறு கிராம மக்களுக்கு உதவி செய்யமுடியும் என்பது பற்றியும் விளக்கிக் கூறினர்.

தஞ்சை வட்டார்ப் பயிர்ப் பாது காப்பு அதிகாரி வி. மகாதேவன், பயிர்களுக்கு ஏற்படும் நோய், பூச்சி, பூஞ்சானம் ஆகியவ பற்றிக் கூறியதுடன், தருத மருந்துகள் தெளிப்பது பற்றியும் விளக்கினர்.

ஊராட்சி ஒன்றிப்பு அலுவலகத் தில் போடப்பட்டுளள மெல் முத லிய பயிர்களுக்கு செய்முறையில் நோய்களை மருந்தடித்துக் காண் பித்தும், 'பவர் ஸ்பிரேயர்' பயன் படுத்தும் விதம் பற்றியும் தெளி வாக்கப்பட்டது.

புதுக்கோட்டை சாகுபடி அபி விருத்தி உதவியாளர் தாரகபிர்ம், பழ அபிவிருத்தியின் முக்கியத்து வம் பற்றியும் எடுத்துச் சொனனர்.

கரம்பக்குடி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் காதர் மொயதீன், மெல், சோளம், கடலை, மினையு போன்ற பயிர்களுக்குப் பாது காப்பு எப்படி அவசியம் என்பது பற்றியும், சீரணியைச் சேர்ந்த வர்கள் கிராம மக்களுக்கு எடுத்துச் சொல்லி பயிருக்கு ஏற்றாபோல காலத்தோடு மருந்தடித்துப் பயிர்ப் பாதுகாப்பு செய்யவேண்டியதன் கடமை பற்றியும் விளக்கியதுடன், பயிற்சியாளருக்குப் பயிற்சி கொடுப்பதற்கு வேண்டிய முழு ஒத்துழைப்பும் தருவதாக உறுதி கூறினர்.

திரு. கிருஷ்ணன் நன்றி கூறினர்.



'செந்தமிழ்க் காவலர்' மறைவுக்கு இரங்கல்

தமிழ்ப் பேராசிரியர்கள் கண் கலங்கினர்

'செந்தமிழ்க் காவலர்' என்றும், 'தமிழ்ப் பெரும் புலவர்' என்றும், 'இருபதாம் நூற்றாண்டு நக்கீரன்' என்றும் போற்றிக் கொண்டாடப் பட்ட டாக்டர் அ. சிதம்பரநாத னார், தமிழ்ப் பெருங்குடி மக்களே விட்டு எதிர்பாராத முறையில் மதுரையில் மறைந்தது குறித்து சென்னை நக்கீரர் கழகம்—திரு வள்ளுவர் தமிழ்க் கல்லூரி—மறை மலையடிகள் ஆராய்ச்சிக் குழு இவைகளின் காப்பாளராய் விங் கிய அவருக்கு இறுதி வணக்கம் செலுத்தும் பொருட்டு 22-11-67 அனறு கல்லூரிக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.

கல்லூரி விரிவுரையாளர் புல வர் பு. விருத்தாசலம் பி.ஏ. இரங் கற் கூட்டத்திற்குத் தலமை வகித் தார்; கல்லூரி விரிவுரையாளருக் பச்சையப்பன் கல்லூரித் தூணைப் பேராசிரியருமான இரா. பூங்குன் றன் எம்.ஏ. அவர்கள், செந்தமிழ்க் காவலரின் குண நலன்களேயும், புல மைத் திறத்தையும், எழுத்தாற் றலேயும், ஆங்கிலப் பேரறிவை யும், ஆட்சிக் கலேத் திறமபெற்ற அவரது ஆருயிரைச் சக்தியையும், விருந்தோம்பல—மானவர் கலே அரவணைத்து ஊக்குவித்து அவர் கனது நலம் மாக்கும் பணபுகளேயும் பாராட்டி உரை நிகழ்த்தினர்.

கல்லூரி இயக்குர் சிறுவை மோகனசுந்தரம் இருங்கற் தீர் மானம் படித்து நிறைவேற்றினர்.

இலங்கை அகதிகட்குப் பயிரிடு நிலம்

இராமநாதபுர மாவட்டத்தில் வழங்க ஏற்பாடு

மதுரை, நவ. 21—

இராமநாதபுர மாவட்டத்தில் வேளாண்மைக்குத் தகுதியான சுமார் 5 இலட்சம் ஏக்கர் நிலத்தை இலங்கையிலிருந்து தாய கம் திருமபிவருக்கும் மக்களுக்கும், நில மிலலாத விவசாயிகளுக்கும் பிரித் தளிப்பது பற்றி ஆய்வு செய்து அறிக்கை தருமாறு மாவட்ட ஆளுநரியிடமும் வனத்துறை அதி காரியிடமும் கேட்டிருப்பதாக அமைச்சர் கோவிந்தசாமி செய்தி யாளர்களிடம் கூறினர்.

அம்பத்தூர் -- வெங்கடாபுரம் கலெஞர் கருணநிதி மன்றம்

22—10—67-ல், அம்பத்தூர் வெங்கடாபுரம் மெளனசுவாமி தெரு 11-ம் எண இலலத்தில், அம்பத் தூர் தி. மு. க. துணைச் செயலா ளர் இரா. மதிஅரசு அவர்கள், கலெஞர் கருணநிதி மன்றத்தைத் துவக்கிவைத்தார்.

23—10—67-ல், மன்ற நிர்வாகி கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலவர்: என். லோகாதன்; செயலளர்: சி. திருவேங்கடம்; பொருளாளர்: பி. எஸ். சண் முகம்; செயற்குழு உறுப்பினர் கள்: ஆர். ரெங்கராஜன், டி. ஜானகிராமன், ஏ. டி. கண்ண பிரான், டி. வி. எஸ். மணி, டி. குலசேகரன், எஸ். திருஞானசம் பந்தம், திருச்சி மாறன.

சட்டமன்றத்தில்...!

கொந்தளிக்கும் கடல்போல் ஆங்காங்கே நிலைமைகள் இருக்கும் இந்திய அரசியலில், அமைதிச் சூழ்நிலையில் பாதுகாப்பான பயணம் செய்யும் தமிழகத்தின் சட்டமன்றங்கள் இன்று கூடியுள்ளன.

'நம் நாடு' இதழின் வசதி—நேரம் ஆகிய இரண்டு காரணங்களினால், சட்டமன்ற நடப்புகளை அப்படியே தரவோ, அந்தந்த நேரந்தோறும் இடைக்கச்செய்யவோ இயலாத நிலை இருக்கிறது!

இதைப் பெரும் அளவு போக்குகின்ற வகையிலும்—'இந்த நிலையில் இவ்வளவுதான் முடியும்' என்ற உங்கள் அனுமானத்தை நம்பிக்கைக்கு பாத்திரமாகும் முறையிலும்—நாளை முதல் (நவ. 25) சட்டமன்ற நிகழ்ச்சிகள் பற்றி 'போகாத நிருபரின்' தொகுப்பு வீளக்கம் நாள்தோறும் இடம்பெறும்.

கம்பருக்குச் சிலை

அண்ணா தந்த உறுதி

சென்னை, நவ. 23—

இன்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்து எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமன் அவர்கள், 'உலகத் தமிழர் மாநாட்டின் போது, கம்பர் சிலையை வைக்கவேண்டும்' என்று கூறினர்.

"மாநாட்டின்போது வைக்கப்படும் சிலைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொருவர் செய்து தருகிறார்கள்; அதுபோல், கம்பர் சிலையை யாராவது செய்துதந்தால் நிச்சயம் வைக்கப்படும்" என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறினார்கள்.

நரிகளுக்குச் சுதந்திரம்!

கியாயம்—நீதி—நேர்மை ஆகியன தடம் புரண்டபோதுகூட, காங்கிரசில் கட்டிக்காக்கப்பட்ட கட்சிக் கட்டுப்பாடு, 'இந்தி வெறி' என்ற உணர்ச்சிக்கு இப்போது தளர்த்தப்படுமோ—என அச்சப்படும் நிலை, புதுடில்லியில் உருவாகி இருப்பதாகத் தெரிகிறது!

வரப்போகும் மொழி மசோதா சட்டத்துக்கு, 'ஒவ்வொருவரும் சுதந்தரமாக வாக்களிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும்' என்ற கோரிக்கையை, காங்கிரசுக் கட்சியில் உள்ள பல நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமையமைச்சருக்கு விடுத்திருக்கிறார்கள்.

ஐம்பது பேர் கேட்டிருக்கும் இந்த 'தனி அனுமதி'யை, இந்தி ரரவும் ஏற்றுக்கொள்ளுவார் எனவும் கூறப்படுகிறது.

இந்தி தனித்து ஏற்றுக்கொள்ளப் படும்வரை எந்த ஒரு மாநிலமும் ஆங்கிலத்தையும் பயன்படுத்த வழிவகுக்கும் மொழி மசோதாவுக்கு, இந்தி மீது பகுதியும் உள்ள காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர்கள், பலதத எதிர்ப்பு காட்டி வருவதே இந்திராவின் ஒப்புதலுக்கான காரணமாகும்!

'கட்சிக் கட்டுப்பாடு உடைக்கப்படும்' என்ற நிலை வருவதற்குமுன், இந்திரா, தானே முன்வந்து கட்சிக் கட்டுப்பாட்டில் தளர்ச்சியைக் காட்டுகிறார்!

அங்கே உள்ளவர்களின் மொழி உணர்வு, கட்சி வரம்பு கடந்து மதிக்கப்படுகிறது!

ஆனால் நமது பார்வையில், அது, மொழி வெறிக்கு முன்வந்து கொடுத்துள்ள சுதந்தரமாகத் தான் தென்படுகிறது!

தமிழ்நாடு காங்கிரசுகளுக்கு, என்ன உணர்வு ஏற்படுகிறதோ தெரிய வில்லை!

'காங்கிரசு' என்ற கட்சி முக்கிய மல்ல; **'இந்தி மட்டுமே'** என்று காங்கிரசிலேயே உள்ள ஐம்பது பேர் காட்டும் **'வெறி உணர்வு'** மதிக்கப்படவுக்குக் கிடைத்துவரும் நிலைகொள்ளப்பட இருக்கிறது!

'அடிப்படுபோல அடிப்பேன்; நீ அழுவதுபோல் அழு' என்ற தந்தரமே தவிர, வேறு ஒன்று மில்லை!

இங்கே வந்தபோது மீனம்பாக்கம் விமான நிலையத்திலிகூட இந்திரா, இன்னந்தான சூசகமாக அப்போதே கூறினார்—"உங்கள்மேல் அங்கே உள்ளவர்கள், 'ஆங்கிலமே வேண்டாம்' என்று கூறுகிறார்களே—என்ன செய்வது?" என்று!

"மசோதா கொண்டுவருவது போல் கொண்டுவரப்படும்; ஆனால், கட்சிக் கட்டுப்பாடு களுக்குக்கே நிற்கதா; நீங்களே சுதந்தரமாக வாக்களிக்கலாம்" என்ற நிலைக்கு இந்திரா அலுமதி அளிக்க இருப்பது, ஆடுகளை வேலைகளில் அடைத்தாலும், அதற்குப் பின்னாலேயே அடைத்து வைத்திருக்கும் நரிகட்டதையும் வெளியே விடுவது போன்றுதான இருக்கிறது!

சனாதாயக முறைகள் சாடிக்கப் படும்போதெலலாம், 'கட்சிக் கட்டுப்பாடு' என்ற சவக்கடிக்குப் பயந்து வாக்களித்த காங்கிரசுகாரர் களுக்கு—இந்தி பேசும உறுபினர்களுக்கு—மொழி மசோதாவின்மீது மட்டும் 'சுதந்தரமாக இயங்க அலுமதி வேண்டும்' எனக் கோருவது, விசித்திரமிக்க நிலையாகும்!

இந்தி பேசும் காங்கிரசுக்காரர் களுக்கு, அந்நாதிந்தியக் காங்கிரசு வினாது வெளிக்கிறது!

இங்கே உள்ள தமிழகத்துக் காங்கிரசு, என்ன பதில சொல்லப் போகிறது எனப் பாரப்போம்!

அங்கே உள்ள 'மொழி வெறி'யர்களுக்கு, மதிப்புத் தரப்படுகிறது!

இங்கே உள்ளவர்களின் மொழி உணர்வாவது பாதுகாக்கப்படுகிறதா எனப் பொறுத்திருந்து நோக்குவோம.

—எஸ். ஆர்.

தமிழக மின் குழு

வேண்டுகோள்

சமீப காலத்தில் தமிழக மின் குழுவுக்குச் சொந்த மான பொருட்கள் சிலருக்றிப் பாக மின்சாரம் பாய்ம் செப்புக் கம்பிகள், இடிதாங்கிகள், மற்றும் அதன் சார்புள்ள பொருட்களின் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன. மின்சாரத் திருட்டும் அதிகரித்துள்ளது.

தமிழக மின் குழு, மக்கள் மின் பொருட்சொத்து. இந்த நிறுவனத்தின் மீலை மதிப்புள்ள இப்பொருட்களின் திருட்டு போகாமல் பாதுகாக்க வேண்டியது அனைவரின் பொறுப்பாகும். இத்தகைய திருட்டுகளில் பொதுமக்கட்கு மின்சார விநியோகம்கூடத் தடைபெறுகிறது. எனவே, நகரங்களிலும், வயல்வெளி களிலும், மற்றும் கிராமப் புறங்களிலும் மின் வழிகளில் (லைன்கள்) இருந்து இம் மாதிரித் திருட்டு போகாமல் இருக்க சுற்றுப்புறத்திலுள்ள மின்சாரம் உபயோகிப்பவர்களும், பொதுமக்களும் கவன மாகக் கண்காளித்து, இத்த கைய திருட்டுக்களைக் கண்டு பிடிக்கலாம். இத் தகைய தீயச் செயல்களில் ஈடுபடுபவர் எவர் மீதாவது சந்தேகப்பட்டால், இந்தத் தகவலை அண் மையில் உள்ள போலீஸ் நிலையத்திலோ, மின்சார அலுவலகத் திலோ தகவல் கொடுத்து உதவுமாறு வேண்டப்படுகிறது.

தமிழக மின் குழு

பெரியாருக்கு மாநகராட்சி

வரவேற்பு

சென்னை, நவ. 23—

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கட்கு, சென்னை மாநகராட்சிமன்றம் வர வேற்பு அளித்துச் சிறப்பித்தது.

நேற்று மாலை மைலேலம் பூங் காவில் இந்த வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறறது. தேசிய விருதுக் குப்பின் மேயர் இராசம்பாதம், வரவேற்பு மடலைப் படித்து அதனை ஒரு பேழையில் வைத்து பெரியாரி டம் அளித்தார்.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்து புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர் கள், பேசியதாவது :—

எனக்கு இங்கு கிடைத்த வர வேற்பும் பாராட்டும், வாய்ப்புக் கிடைக்காத கல்லூரிகளுக்கும் சேர்த்து கிடைத்த பாராட்டாகவே நான கருதுகிறேன். மற்ற கல்லூரி கள் இதை அப்படித்தான் கருது வார்கள் என்று எதிர்பார்க் கிறேன்.

மேயர் என்னை, 'சிறந்த அர சியல் நொண்டன்' என்று கூறி னார்; உண்மையிலேயே, நான் கலவனுடை வாழ்கிறேன—சிறந்த அரசியல் தொண்டனுக விளங்கு கிறேன் என்று யாராவது கரு தினால், அங்குப் பொருமை, அறிஞர் அண்ணா அவர்களேயே சாரும்.

சென்னை நகராட்சி முன்னுதைகள் பயிற்சி முகாம் நடத்தப்போவ தாகக் கேள்விப்பட்டேன். இத்துப் பயிற்சி முகாமின் பொறுப்பில் ஒரு பகுதியை நானே ஏறறுக்கொள கிறேன். இதற்கான எல்லா வசதி யையும் செய்து கொடுக்க நான தயாராக இருக்கிறேன்.

முன்பு அண்ணமலை பல்கலைக் கழகத்துக்கு ஒரு தொகையை நன் கொடையாக கொடுத்தேனே. அந்தப் பணத்திலிருந்து கிடைக் கும வட்டியிளுமும அங்கு மாண வர்களுக்குப் பரிசு அளிக்கப்பட்டு வருகிறது. அதேபோல் சென்னை நகரமன்றத்திற்கும ஒரு கணிச மான தொகையை நன்கொடையாக வழங்கத் திட்டமிட்டிருக்கிறேன்.

"இந்தப் பணத்திலிருந்து கிடைக்கும் வட்டியினமூலம், ஆண்டுதோறும், சென்னை நகராட்சி பள்ளிக்கூடங்களில் கல்வி கற்கும் மாணவ—மாணவிகளில், சிறந்த ஐந்து மாணவர்களுக்கு விளங்குபவர்களுக்கு இரண்டு தங் கப் பதக்கமும், ஒழுக்கம நேர்மை முதலியவைகளில் சிறந்து விளங் கும் மாணவர்களுக்கு 5 தங்கப் பதக்கங்களும் வழங்கப் படும்" என்னும் என்னும்.

மேலும் எம். ஜி. ஆர். அவர் கள், மாநகராட்சியின் வருமானம் பெருகுவதற்குச் சில அரிய யோசனைகளைக் கூறினர்.

ஒழுக்கத்திற்குப் பரிசுகள்

சென்னை மாநகராட்சி வரவேற்பில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அறிவிப்பு

சென்னை, நவ. 24—

சென்னை மாநகராட்சி சார்பில் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு, நேற்று மாலை வரவேற்பு கொடுக்கப்பட்டது.

இந்த வரவேற்பு விழா, 'மை லேடீஸ்' பூங்காவில் நடந்தது.

மேயர் இராசம்பாதம், வர வேற்பு இதழை வெள்ளிப் பேழை யில் வைத்து எம். ஜி. ஆர். அவர் களிடம் அளித்தார்.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்து புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர் கள், பேசியதாவது :—

"சென்னை மாநகராட்சி மன்றம் அளித்த வரவேற்பு பெருமைக்குரியது' என்று குறிப்பிட்டு மகிழ்ச்சி தெரி வித்தார்; மாநகராட்சியின் பணி கனிப் பாராட்டினார்.

விழாவுக்கு, செய்தித் துறை அமைச்சர் திருமதி சதியவாணி முத்து, கழக அமைப்புச் செயலர ளர் திரு. என். வி. நடராசன், 'விடுதலை' ஆசிரியர் கி. வீரமணி, ஓளவை டி. கே. சண்முகம் முதலா னோர் வந்திருந்தனர்.

சங்கரி இடைத் தேர்தல்

கழக வேட்பாளர்--சி. வீரமணி

'கூட்டணிக் கட்சிகளின் நல்லாதரவுடன் போட்டியிடுவார்' என அண்ணு அறிவிப்பு

சென்னை, நவ. 23—

"சங்கரி இடைத் தேர்தலில், தி. மு. கழக வேட்பாளராகத் தோழர் சி. வீரமணி போட்டியிடுவார்"

என, அறிஞர் அண்ணு அவர்கள், செய்தியாளர்களிடம் அறிவித் தார் ; இது தொடர்பாக மேலும் அவர் தெரிவித்ததாவது :—

"சங்கரி இடைத் தேர்தலிலும், வழக்கம் போலவே கூட்டணிக் கட்சிகள், தமது நல்லாதவீனை தி. மு. கழக வேட்பாளருக்கு அளிக்கின்றனர்.

"கூட்டணிக் கட்சிகளின் நல்லாதரவுடனேயே தி. மு. கழக வேட்பாளர், இந்த இடைத் தேர்தலில் நிறுத்தப்படுகிறார்."

காங்கிரசு வேட்பாளர்

"காங்கிரசு வேட்பாளராக பி. டி. சீராங்கன் என்பவரின் பெயரை தமிழ்நாடு காங்கிரசுத் தேர்தல் குழு சிபாரிசு செய்திருக்கிறது" என, செய்தி ஒன்று கூறுகிறது.

குழுக் கூட்டம்

மன்னார்குடி வட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம் 26—11—67 மாலை 2-மணிக்கு திரு. ப. நா. அவர்கள் இல்லத்தில் மாவட்டச் செயலாளர் முன்னிலையில் நடை பெறும்.

அமைச்சர்

செ. மாதவன்

சுற்றுப்பயணம்

நவ. 26 காலை 7-20 மணி : கோவை ; 10-45 மணி : வால் பாறை ; மாலை 6-30 மணி : கோவை.

கைதானோர் விடுதலையாயினர்

சென்னை, நவ. 23—

இன்று காலை மத்திய அரசு அலுவலகங்களில் மறியல் செய்து கைதான வலது பொதுவுடைமைக் கட்சித் தலைவர் கல்யாணசுந்தரம், மற்றும் ஏ. எஸ். கே. ஐயங்கார் உட்பட 101 பேர் இன்று மாலை 5-மணியளவில் விடுதலை செய்யப் பட்டனர்.

தாயகம் திரும்புகிறார் மதியழகன்

மாவட்டச் செயலாளர் வேண்டுகோள்

சென்னை, நவ. 23—

இத்தாலிய காட்டின் தலைநகரான ரோம் நகரில் நடைபெற்ற உலக உணவு மாநாட்டில் கலந்துகொண்டுவிட்ட தமிழக உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், நவ. 25-ல் டில்லி வந்து சேருவார். அடுத்த நாள்—நவ. 26 பிற்பகல் 1-30 மணியளவில் சென்னை வந்து சேருவார்.

'26—11—67 பிற்பகல் 1-30 மணிக்கு உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், உலக உணவு மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு சென்னை வந்டைகிறார்; அதுசமயம் கழக கத் தோழர்கள் அனைவரும் உணவு அமைச்சரை சிறப்பான முறையில் வரவேற்க மாலைகளு டனும், கழகக் கொடிகளுடனும் விமானநிலையத்திற்கு வருகை தரும்படி கேட்டுக் கொள்கி றேன்"

என, சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் நீலகாரயணன் அறி விக்கிறார்.

நடக்க இருப்பவை

26--11--67

திண்டுக்கல்

எம். ஜி. ஆர். மன்றத் திறப்பு விழா ; இரவு 7-மணிக்கு, எழுமல பாக்டரி ரோடில் ; தலைவர் : க. மைகேல் ; பேசவோர் : கஸ் தூரி பி.எஸ்சி., மு. காசர்சர் பி.ஏ., க. வே. வி. இராசன், அ. தங்கவேலு, பொன். சீனிவாசன், கே. பி. கே. சாமி, ஏ. எஸ். ஏ. சாமி, அ. ஜோசப, மு. பெரு மாள்.

சமயநல்லூர்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு திருவள்ளுவர் திட லில் ; தலைவர் : எம். சௌந்தர பாண்டியன் ; பேசவோர் : கா. இராசாமுகமது பி.ஏ.,பி.எல்., எஸ். அக்கினிராசு பி.ஏ.,எம். எல்.ஏ., கே. எஸ். சுந்தரம் எம்.சி., வி. எம். துரைராசு, கே. இராசு.

கோவை 4-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு தெப்பக்குளம் மைதா னத்தில் ; தலைவர் : எம். பட்டி லிங்கம் ; பேசவோர் : சி. தமி முரசி பி.ஏ., எஸ். ஏ. இராச மாணிக்கம் எம்.சி., கே. கோவிந் தராசலு எம்.எல்.ஏ., எஸ். சோம சுந்தரம், வெ. கிருட்டினமூர்த்தி, மு. தண்டபாணி.

அமைச்சர்

சாதிக் பாட்சா

சுற்றுப்பயணம்

நவ. 26 காலை 7-20 மணி: கோயம் புத்தூர்; 11 மணி : உளிக்கல்— ஊராட்சி மன்ற வரவேற்பு; 12 மணி: கூலூர்—பாலப்பூர் நியய அலுவலகாள் சங்க இரண்டாவது ஆண்டு மாநாட்டு துவக்க விழா; பிற்பகல் 3 மணி: கூலூர்—நீலகிரி தோட்டத் தொழிலாளர் முன்னேற்ற சங்க மாநாடு

நிராவிட முன்னேற்றக் கழகந்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்கள் ஆதிரையாகவும், வெளியிடுவ ராகவும், அச்சுபெயராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24- குயிலராஜ னன் செட்டித் தெரு, சென்னை-13 ஆகியதில் வெளியிடப்பிறது.)